அசல்

2.11.29. ஜகந்நாதன்.

நகல் - ~~2~~ 1

144-146

உ

முருகன் துணை.

மோகனூர்
2.11.29

திருவடிக் கமலங்களில் அடியேன் ஜகந்நாதன் அநேக சாஷ்டாங்க நமஸ்காரம்.
உபயக்ஷேமோபரி

இதற்கு முன் அடியேன் எழுதிய கார்டு கிடைத்திருக்குமென நம்புகிறேன். அவ்விடத்து ஆசீர்வாதத்தினால் தீபாவளி இனிதே நிறைவேறியது. காலந்தாழ்க்காது விரைவிற் சென்னை மீளுங் கருத்துடையேனாயினும் சில குடும்பத் தொல்லைகள் அச்செலவைத் தகைந்தன. நிற்க,

நேற்று (1.11.29)ப் பிற்பகலின் முருகன் திருவருளால் என்னுடைய இரண்டாவது தங்கை புஷ்பவதியாயினள். மாப்பிள்ளையவர்கள் வருகையை எதிர்நோக்கில் நாளை தினம் 6. ஆம் தேதியாக வைத்திருக்கிறார்கள். அப்பொழுது இங்கு அடியேன் இருத்தல் நலமென்று பெற்றோர்கள் விரும்புதலின் அதுகாறும் இருந்துவிட்டு நன்னாளொன்றிற் புறப்பட்டுச் சென்னை வந்துசேர எண்ணியிருக்கிறேன். நான் வரும் தினத்தைப் பின்பு விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

தக்கயாகப்பரணி ஏ. பாரங்கள் வரை வந்திருக்கிறதை யறிந்தேன். தமிழ்ச்சங்க மீட்டிங்கு எப்பொழுது நடைபெறுமோ?

என்னுடைய நமஸ்காரங்களை மகா.ம.ஸ்ரீ அண்ணா முதலியவர்களுக்கும் என் ஞாபகத்தை நண்பர்களாகிய சுப்பிரமணிய ஐயர், கோதண்டராமையர், சி. சுப்பிரமணியன் முதலியவர்களுக்கும் அறிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

பாடல்கள்

தலையளித்த செந்தமிழ்த்தாய் தூங்கியாவி மழுங்கியவ்
விலையளித்த கலைகள்பல மீண்டொளிரச் செய்வித்தான்
நிலையளித்தான் ~~ஐயவன்றிக் கழ~~
மாணவர்க்கு நிலமிசைத்தண் டமிழென்றுங்
கலையளித்தா னையன்றிக் கழறுவது முளதேயோ

அசல்

2.11.29. ஜகந்நாதன்.

நகல் - 1

அகத்தியனார் பயந்தவிர்ந்த அருந்தமிழிந் நாம்மிந்த
சகத்தியலின் பயந்தவிர்ந்தே சாலும்ழ கௌவுறைத்
தகத்த ஒழுங்கும் பலநூலும் சாமிநா தக்குரவின்
தொகுத்துரையில் விளக்காதேல் தூத்தமிழின் பெருமையெங்கே

நாமிரு ணாற்றவருஞ்செய் நாட்பயனிற் பூதலத்தே
சாமிநா தக்குரவன் சார்ந்திலனேல் — ஆமிந்நாள்
எட்டுத் தொகையெங்கே ஐங்கா வியங்களெங்கே

இங்ஙனம்

திருவடித் தொண்டன்

ஜகந்நாதன்

அசல்

2.11.29. ஜகந்நாதன்.

நகல் - 1

உ. ௧௧. ௨௯.

கி. வா. ஜகந்நாதையர்
மோகனூர்

து. க. } K-144-146
VOL }

Copied